# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 186/ 2019 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 6 |
| Name | : ஜெயக்கொடி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.11.2024.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சீல்நாயக்கன்பட்டியில் குடியிருந்து டீக்கடை நடத்தி வருகிறேன். ஆஜா் எதிரியை தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் டீக்கடையில் இருந்தபோது நான் சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்தேன். அங்கு வெளியே யாரையோ குத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். யாரை குத்தினார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை**

கடந்த 27.12.2018ம் தேதி காலை சுமார் 5.00 மணிக்கு நான் எனது டீக்கடையில் இருந்தபோது தங்கமுடி, கந்தன், மூக்கையா, தங்கப்பன் ஆகியோர்கள் டீக்குடித்து கொண்டிருந்தார்கள். அப்போது போர்வை போர்த்திக்கொண்டு அங்கு வந்த எதிரி தங்கமுடியை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அருவாளை

எடுத்து ஓங்கி முன்பக்க தலையில் வெட்டினார். அடுத்து அவர் விலகி கொள்ள பின்பக்க பிடறியில் அருவாள் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி ஊர்காரர் என்பதால் அவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.11.15 16:21:38 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.